என்.கே.சி., பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட் வழங்கும்

நிதி - வணிகம் - முதலீடு

(தனிச் சுற்றுக்கு மட்டும்) மலர் - 1, இதழ் - 6, 1.9.2026 பக்கம்: 21 மின்னிதழ்

பங்குச் சந்தை புதிய வெளியீடுகள்

சேதுராமன் சாத்தப்பன்
Advisor,
NKC Finance Private Limited

1990களில் தினசரி ஒரு கம்பெனியின் புதிய வெளியீடு வந்தது. மும்பையில் தெருவெல்லாம் ஷேர் அப்ளிகேஷன் ஃபார்ம்கள் தான் கலர் கலராக கொட்டிக் கிடக்கும். குஜராத்திகளும், மராத்திகளும் அள்ளிக் கொண்டு செல்வார்கள். அப்ளை செய்வார்கள், அலாட்மெண்ட் கிடைத்தவர்கள் உடனடியாக லாபத்தில் விற்பவர்களும் இருப்பார்கள், நீண்டகாலத்திற்கு வைத்திருப்பவர்களும் இருப்பார்கள். அப்படி வெளிவந்த கோல்ட் மைன் வெளியீடுகளில் ஒன்றிரண்டு என்று பார்த்தால் இன்போசிஸ் போன்றவை. அவற்றில் முதலீடு செய்தவர்கள் இன்று லட்சாதிபதியாக ஏன் கோடீஸ்வரர்களாக கூட ஆகி இருக்கிறார்கள்.

ஆனால் தற்போது நிலைமை அப்படி இல்லை. காரணம் பங்குச்சந்தையை பற்றிய புரிதல்கள் மக்களிடையே அதிகமாகி இருக்கின்றன. இதனால் நல்ல புதிய வெளியீடுகளில் முதலீடு செய்பவர்கள் கூடி வருகின்றனர். ஆதலால் புதிய வெளியீடுகளில் நீங்கள் தனிப்பட்ட முறையில் (அதாவது வீட்டில் ஒருவர் மட்டும்) முதலீடு செய்யும் போது உங்களுக்கு அலாட்மெண்ட் கிடைக்கும் வாய்ப்புக்கள் குறைவாக இருக்கிறது. இதற்காக குஜராத்திகளும் மராத்திகளும் என்ன செய்கிறார்கள் தெரியுமா? வீட்டில் இருக்கும் எல்லோர் பெயரிலும் டீமேட் கணக்கு ஓபன் செய்து நல்ல ஒரு புதிய வெளியீடு வரும்போது அனைவரது பெயரிலும் அந்த புதிய வெளியீட்டில் மினிமம் அமௌண்ட் அப்ளை செய்கிறார்கள். மினிமம் அமௌண்ட் என்றால் எவ்வளவு போட வேண்டும் என்று கேட்கிறீர்களா? ஒரு நபருக்கு அப்ளை செய்வதற்கு அதிகபட்சமாக 15 ஆயிரம் ரூபாய் தேவைப்படும்.

ஒரு குடும்பத்தில் ஐந்து முதல் பத்து பேர் வரை அப்ளை செய்யும்போது குலுக்கல் முறையில் அலாட்மெண்ட் கிடைப்பதில் உங்கள் குடும்பத்திற்கு வாய்ப்புக்கள் அதிகமாக இருக்கிறது.

குஜராத்திகள், மராத்தியர்கள் ஒருவருக்கொருவர் பங்குச்சந்தையை பற்றி சொல்லி அதில் இருக்கும் லாப நஷ்டங்களை இளைய வயதிலேயே புரிய வைத்து விடுகின்றனர்.

நீங்களும் உங்கள் குடும்பத்தில் உள்ள அனைவர் பெயரிலும் டிமேட் அக்கவுண்ட் ஓபன் செய்து நல்ல புதிய வெளியீடுகள் வரும்போது எல்லோர் பெயரிலும் அப்ளை செய்யுங்கள். உங்கள் வீட்டில்

ஓரிருவருக்கு அலாட்மெண்ட் கிடைக்கும் பட்சத்தில் அந்த பங்கை நீண்டகால அடிப்படையில் வைத்திருக்கலாம் அல்லது உடனடியாக விற்று லாபத்தை பார்க்கலாம்.

ஒரு புதிய வெளியீடு எப்படி வரவேற்பு இருக்கிறது என்று தெரிந்து கொண்டு மூன்றாவது நாள் அதாவது கடைசி நாள் அந்த புதிய வெளியீட்டில் அப்ளை செய்வது நல்லது. இதை தெரிந்து கொள்வதற்கு பல இணையத் தளங்கள் இருக்கின்றன. அதில் சிறப்பான ஒரு இணையதளம் www.chittorgarh.com. தொடர்ந்து இந்த இணையதளத்தை பார்த்து வாருங்கள்.

சமீபத்தில் அமெரிக்கா ஈரான் உச்சகட்ட போரின் போது புதிய வெளியீடுகள் அதிகம் வரவில்லை. ஆனால் தற்போது பல புதிய வெளியீடுகள் வர ஆரம்பித்திருக்கின்றன. ஆதலால் நம்மவர்களும் வெளிவரும் நல்ல வெளியீடுகளில் மினிமம் லாட் போட்டு தங்கள் அதிர்ஷ்டத்தை சோதித்து பார்ப்பது நல்லது.

என்ன எங்கே கிளம்பி விட்டீர்கள்? எல்லோர் பெயரிலும் டிமேட் கணக்கு தொடங்கவா? நல்லது.

நிதி - வணிகம் - முதலீடு

பற்றிய கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன. நிதி - வணிகம் - முதலீடு மின்னிதழ் "என்.கே.சி., பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்" (NKC Finance Private Limited) நிறுவனத்தின் கீழ் வெளி வருகிறது. தமிழில் வர்த்தக கட்டுரைகள் எழுத ஆர்வம் உள்ளவர்கள் 250 - 300 வார்த்தைகளுக்கு மிகையாகாமல் எங்களுக்கு எழுதி அனுப்பவும்.

NKC Finance Private Limited
Board

Dr. E. Gnanam,
Chairman

Thiru. PL. Ramasamy,
Managing Director

Thiru. S.Chidambaram,
Joint Managing Director

Thiru. O. Somasundaram,
Director

Thiru. Sethuraman Sathappan,
Advisor

என் கே சி பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்

N K C Finance Private Limited

We Listen you Prosper

நம்பகமான, பாதுகாப்பான முதலீட்டுக்கு

எங்கள் கம்பெனியின் 10 சதவிகித வட்டியுடனான பாதுகாப்பான கடன் பத்திரங்கள்

பத்திரத்தின் தன்மை	பாதுகாப்பான கடன் பத்திரங்கள் (secured Non convertible Debentures)
வட்டி விகிதம்	10% p.a. (மூன்று மாதத்திற்கு ஒரு முறை)
குறைந்த பட்ச முதலீட்டு தொகை	ரூ.3,00,000/=
அதிக பட்ச முதலீட்டு தொகை	தலா ஒரு லட்சம் வீதம் ரூ.99 லட்சம் வரை
குறைந்த பட்ச முதலீட்டு காலம்	மூன்று வருடம்
அதிக பட்சம் முதிர்வு தேதி	30-09-2029 மூன்று வருடம் கடந்ததும் பத்திரத்தை மீட்டுக்கொள்ளும் வசதி உண்டு
முதலீட்டு காலத்திற்கு முன் திரும்பப்பெறும் வசதி	குறைந்த பட்சம் ஒரு வருடம் முடிந்திருக்கவேண்டும். ஒரு வருடத்திற்கு பிறகு மூன்று வருடங்களுக்குள் மீட்டுக்கொள்ளும் சமயம் 0.5 வட்டி பிடித்தம் செய்யப்படும்.
வருமான வரி	வருமான வரி சட்டத்தின் வரம்புகளுக்கு உட்பட்டு 10 சதவிகிதம் வரி பிடித்தம் செய்யப்படும். வரிவிலக்கு வேண்டுபவர்கள் தகுந்த விண்ணப்ப படிவம் கொடுத்து விலக்கு பெற்றுக் கொள்ளலாம்.

என் கே சி பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்

(RBI Registration No. N-07-00846)

பதிவு அலுவலகம் 25,
எழும்பூர் நெடுஞ்சாலை
எழும்பூர், சென்னை 600 008

Phone Numbers:
92800 85934 & 92800 85935
(Email: nkcfin18@gmail.com)
www.nkcfinance.com

(For Private Circulation only)

மாத்தி யோசி...
லைஃப் ஈசி...

என்.கே.சி. பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட் வழங்கும்

ஈ–ஆட்டோ கடன் உதவி

அ. ஹுமாயூன்,
சிதம்பரம்

பள்ளி, கல்லூரி, அலுவலகம், மருத்துவமனை, ரயில் நிலையம், பேருந்து நிலையம், சந்தை போன்ற இடங்களுக்கு அவசரமாகச் செல்ல வேண்டிய நேரங்களில் ஆட்டோ ஓட்டுநர்களின் சேவை மிகவும் உதவியாக இருக்கிறது. பொதுப் பேருந்துகள் செல்ல முடியாத சிறிய தெருக்கள் மற்றும் கிராமப்புறப் பகுதிகளுக்கும் ஆட்டோக்கள் சென்று மக்களுக்கு பயனளிக்கின்றன.

ஆட்டோ தொழிலின் முக்கியத்துவம் அறிந்த என்.கே.சி. பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட் காரைக்குடியில் எலெக்ட்ரிக் ஆட்டோ (Electric Auto)களுக்கு கடனுதவி செய்து வருகிறார்கள்.

கடனுதவி பெற்றவர்களில் ஒருவரான திரு. செந்தில் அவர்களை நமது நிதி–வணிகம்–முதலீடு இதழுக்காக பேட்டி கண்டோம்.

திரு. செந்தில்

என்.கே.சி. பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட் மூலம் எலெக்ட்ரிக் ஆட்டோ (Electric Auto) வாங்க கடனுதவி பெற்றது பற்றி சொல்லுங்கள்..

இரணிக்கோவில் சேர்ந்த நான் டிப்ளோமா சிவில் படித்திருக்கிறேன். என்கேசி திரு. சோமசுந்தரம் அண்ணன் அவர்கள், காரைக்குடி ரயில்வே ஸ்டேஷன் ஆட்டோ பிக்அப் குறித்து என்னுடன் பேச, அனுகூலங்கள் அதிகம் உள்ளதையும், பின்னர் சுலபமான EMI உள்ளதையும் அறிந்து [SS2] உடனே ஆட்டோ லோன் எடுக்க ஒப்புக்கொண்டேன்.

டிவிஎஸ் ஈவி மேக்ஸ் (TVS EV-MAX) ஆட்டோ வாங்க என்.கே.சி விரைவில் கடனுதவி அளித்தார்கள்.

காரைக்குடி ரயில்வே ஸ்டேஷன் ஆட்டோ பிக்அப் நோக்கம் குறித்து சொல்லுங்கள்

சென்னையில் இருந்து காரைக்குடிக்கு பல்லவனில் வரும் நகரத்தார்களுக்கு, அவர்களுடைய ஊர்களுக்கு இரவு நேரத்தில் குறைந்த வாடகையில் பயணம் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இதில் காரைக்குடியை சுற்றி உள்ள நகரத்தார் தங்களின் ஊர்களுக்கு போக, என்.கே.சி. நிறுவனம் எங்களிடம் பேசி கட்டணங்களை குறிப்பிட்ட காலத்திற்கு நிர்ணயம் செய்துள்ளது. இதனால் நாங்கள் நகரத்தார் பயணிகளுக்கு நன்கு சேவை செய்து இருசாராரும் பயனடைந்து வருகிறோம்.

இதற்கு நகரத்தார் மத்தியில் நல்ல வரவேற்பு உள்ளது.

இந்த நகரத்தார் ஸ்பெஷல் ஆட்டோ சிறப்பம்சங்கள் என எதை நினைக்கிறீர்கள்?

நியாயமான கட்டணம், பாதுகாப்பான பயணம், மரியாதையான அணுகுமுறை, பயணிகளின் பாதுகாப்பிற்கு முன்னுரிமை போன்றவை குறித்து பாராட்டுவார்கள். குறிப்பாக ரயிலில் தனியாக வரும் பெண்களும் அதிக பாதுகாப்பாக உணர்வதாக சொல்வார்கள்.

எலக்ட்ரிக் ஆட்டோ பராமரிப்பு செலவு மிகவும் குறைவு. வண்டியில் பயணம் செய்யும் போது சுத்தமாக சத்தம் வராது. புகை இருக்காது. வண்டி குலுங்காது. எனவே மக்களிடம் நாங்கள் எதிர்பார்த்ததை விட நல்ல வரவேற்பு உள்ளது.

உங்களுடன் இருக்கும் சக ஆட்டோ டிரைவர்கள் இது பற்றி என்ன சொல்கிறார்கள்?

இங்கே காரைக்குடியில் ஆட்டோ டிரைவர்கள் என்.கே.சி செய்யும் கடன் உதவி பற்றிய விளக்கம் எங்களிடம் கேட்டு, உடனுக்குடன் அவர்கள் என்.கே.சி நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு பேசி கொண்டு இருக்கிறார்கள். எனவே வரும் காலத்தில் என்.கே.சி கடன் உதவி செய்த ஆட்டோக்கள் தமிழ்நாட்டில் பல இடங்களிலும் ஓடும் என்பதில் சந்தேகம் இல்லை.

முடிவாக...

ஆட்டோ ஓட்டுநர் சேவை என்பது வெறும் போக்குவரத்து சேவை மட்டுமல்ல. அது மக்களின் அன்றாட வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்த ஒரு முக்கியமான ஒரு சமூக சேவையை மக்களுக்கு செய்கிறீர்கள்.

தொடர்ந்து சக்கரம் சுழலட்டும்.. சேவைகள் தொடரட்டும் என லெட்சுமணனுக்கு வாழ்த்து கூறி விடை பெற்றோம்.

என்.கே.சி. பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்
www.nkcfinance.com

OUR SERVICE :

- 24 Hours Emergency & Trauma Care
- 24 Hours Ambulance Service
- 24 Hours Laboratory
- Air Conditioned Private Rooms
- Air Conditioned General Ward
- Fully equipped ICU
- Maternity Care
- Major Operation Theatres
- X-Ray & Ultrasound
- Multi speciality Consultation
- Physiotheraphy & Rehabilitation
- Dental and Maxillofacial Surgery

WHY CHOOSE US

With 50+ years of trusted healthcare, we're a fully air-conditioned multispeciality hospital offering expert doctors, advanced facilities, and compassionate care—all under one roof.

MUTHU GROUP SINCE 1970

MUTHU HOSPITAL
Perambur

CONTACT US :

+91 7397 310 543
044 7962 0543

336, Paper Mills Road, Perambur

muthuhospitalperambur.com

NKC FINANCE PRIVATE LIMITED

(RBI REGISTRATION No.N-07-00846)

Registered & Corporate Office:
25/55 Egmore High Road, Egmore, Chennai 600008.
Phone Number: 044-26202064
Phone Numbers: 92800 85934, 92800 85935
Ponnamaravathi: 92800 85940
Email: nkcfin18@gmail.com, Website: www.nkcfinance.com

WE EXTEND THE FOLLOWING LOANS:

- Loan against Property at competitive rate of Interest. (Repayment up to 60 months)
- Business Loans (Short Term, Long Term and Line of Credit) against Property
- Instant Loan against Jewellery

» Basic Requirements: Acceptable CIBIL/CRIF Score, proof for Income/ Revenue Generation with 12 months Bank Statements.

» In Principle sanction will be given within 3 working days and regular Sanction will be given within 7 working days.

» Processing Charges, Pre-closing charges are the lowest. No hidden Charges. Simple Documents, quick decisions and Hassle-free procedures.

Quantum:

Rs. 5 Lakhs - Rs. 50 Lakhs

GNANAM.E
Chairman
PH-98843 82828

RAMASAMY.P
Managing Director
PH-92800 85934

CHIDAMBARAM.S
Joint Managing Director
PH-92800 85935

SOMASUNDARAM.O
Director
PH-93631 02923

SETHURAMAN SATHAPPAN
Advisor
PH-98204 51259

Senthoor
RESIDENCY
வீடுகள், அறைகள்
நாள் மற்றும் மாத
வாடகைக்கு விடப்படும்
17/2, Nethaji Road, Behind Mathoor Valagam, Near New Bus Stand,
KARAIKUDI - 630 003
Cell : 9994858735

Non-Banking Financial Company (NBFC)

PART-2

வங்கியல்லாத நிதி நிறுவனம்

(Non-Banking Financial Company (NBFC))

V.RAMASAMY, B.Com., F.C.A.
Chartered Accountant
COIMBATORE
ramsfca@gmail.com

இந்திய ரிசர்வ் வங்கியிடம் நமது வங்கியல்லாத நிதி நிறுவனத்தை பதிவு செய்ய நாம் என்ன செய்ய வேண்டும்.

ரிசர்வ் வங்கிச் சட்டம், 1934-இன் பிரிவு 45I(a)-இன் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளபடி, ஒரு வங்கியல்லாத நிதி நிறுவனத் தொழிலைத் தொடங்க விரும்பும் ஒரு 'நிறுவனம்' பின்வருவனவற்றைப் பூர்த்தி செய்ய வேண்டும்:

(i) இது 1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டம் அல்லது அதற்கு

இணையான 2013-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் பிரிவு 3-இன் கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாக இருக்க வேண்டும்.

(ii) இது குறைந்தபட்சம் ₹10 கோடி நிகரச் சொந்த நிதியைக் (Net Owned Fund) கொண்டிருக்க வேண்டும். (குறிப்பிட்ட வகை NBFC-களுக்கான குறைந்தபட்ச நிதித் தேவைகள்:

- NBFC-IFC (Infrastructure Finance Company) ₹300 கோடி;
- IDF-NBFC (Infrastructure Debt Fund) ₹300 கோடி;
- MGC (Mortgage Guarantee Company) ₹100 கோடி;
- HFC (Housing Finance Company) ₹20 கோடி;
- முக்கியப் பணிகளை மட்டும் செய்யும் SPDs (Standalone Primary Dealers) ₹150 கோடி;
- இதர பணிகளையும் செய்யும் SPDs ₹250 கோடி;
- NBFC-AA ₹2 கோடி;
- NBFC-P2P ₹2 கோடி).

(iii) விண்ணப்பம் செய்யும் நிறுவனம், ரிசர்வ் வங்கியின் PRAVAAH இணையதளத்தில், ஜூன் 17, 2016 தேதியிட்ட ரிசர்வ் வங்கியின் செய்திக்குறிப்பு (2015-2016/2935)-இல் குறிப்பிடப்பட்டுள்ள தேவையான ஆவணங்களுடன் விண்ணப்பிக்க வேண்டும்.

ரிசர்வ் வங்கியிடம் பதிவு செய்யப்பட்டுள்ள NBFC-களின் பல்வேறு வகைகள்/பிரிவுகள் என்னவென்று நாம் தெரிந்து கொள்ளலாம்.

NBFC-கள் மூன்று நிலைகளில் கையகப்படுத்தப்படுகின்றன:

(அ) பொறுப்புகளின் அடிப்படையில்: வைப்புத்தொகை பெறும் மற்றும் வைப்புத்தொகை பெறாத NBFC-கள்;

(ஆ) ஒழுங்குமுறை கட்டமைப்பின் அடிப்படையில்: 'அளவு சார்ந்த ஒழுங்குமுறை' (Scale Based Regulation) விதிகளின்படி Base Layer, Middle Layer, Upper Layer மற்றும் Top Layer என நான்கு நிலைகள்;

(இ) அவை செய்யும் செயல்பாடுகளின் அடிப்படையில், செயல்பாடுகளின் அடிப்படையில் NBFC-களின் வகைகள்:

(i) முதலீடு மற்றும் கடன் நிறுவனம் (ICC): சொத்துக்களுக்கு நிதியளித்தல் (Asset Finance), கடன் அல்லது முன்பணம் வழங்குதல் மற்றும் பிணையங்களை (Securities) வாங்குதல் ஆகியவற்றை முதன்மை வணிகமாகக் கொண்ட நிறுவனங்கள்.

(ii) வீட்டு வசதி நிதி நிறுவனம் (HFC):

(அ) இது ஒரு NBFC. இதன் மொத்தச் சொத்துக்களில் குறைந்தது 60% வீட்டு வசதிக்கு நிதியளிப்பதில் (Housing Finance) இருக்க வேண்டும்.

(ஆ) மொத்தச் சொத்துக்களில் குறைந்தது 50% தனிநபர்களுக்கான வீட்டு வசதி கடன்களாக இருக்க வேண்டும்.

(iii) கட்டமைப்பு நிதி நிறுவனம் (IFC): தனது மொத்தச் சொத்துக்களில் குறைந்தது 75 சதவீதத்தை உள்கட்டமைப்பு கடன்களுக்காக (Infra-structure lending) ஒதுக்கும் நிறுவனம்.

(iv) உள்கட்டமைப்பு கடன் நிதியம் (IDF-NBFC): இது வைப்புத்தொகை பெறாத NBFC ஆகும். இது

(அ) குறைந்தது ஒரு வருடம் வணிக ரீதியாக வெற்றிகரமாகச் செயல்பட்ட உள்கட்டமைப்பு திட்டங்களுக்கு மறுநிதி (Refinance) வழங்கலாம்;

(ஆ) 'Toll Operate Transfer' (TOT) திட்டங்களுக்கு நேரடி கடன் வழங்கலாம்.

(v) முக்கிய முதலீட்டு நிறுவனம் (CIC): குழும நிறுவனங்களின் பங்குகள் மற்றும் பிணையங்களை வாங்குவதை வணிகமாகக் கொண்ட நிறுவனம்.

(அ) இது தனது நிகரச் சொத்துக்களில் 90 சதவீதத்திற்குக் குறையாமல் குழும நிறுவனங்களின் பங்குகள், கடன் அல்லது கடன்களாக வைத்திருக்க

வேண்டும்.

(ஆ) இதன் சொத்து மதிப்பு ₹100 கோடி அல்லது அதற்கு மேல் இருக்க வேண்டும் மற்றும் இது பொது நிதியை (Public funds) ஏற்க வேண்டும்.

(vi) மைக்ரோ ஃபைனான்ஸ் நிறுவனம் (NBFC-MFI): இது வைப்புத்தொகை பெறாத NBFC. இதன் மொத்தச் சொத்துக்களில் குறைந்தது 75 சதவீதம் "மைக்ரோ ஃபைனான்ஸ் கடன்களுக்காக" ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும்.

- ஆண்டு வருமானம் ₹3,00,000 வரை உள்ள குடும்பங்களுக்கு வழங்கப்படும் பிணையற்ற (Collateral-free) கடன்களே மைக்ரோ ஃபைனான்ஸ் கடன்கள் எனப்படும்.

(vii) NBFC ஃபேக்டர்ஸ் (NBFC-Factors): 'ஃபேக்டரிங்' (Factoring) வணிகத்தை முதன்மையாகக் கொண்ட நிறுவனம். இதன் நிதிச் சொத்துக்களில் குறைந்தது 50 சதவீதம் ஃபேக்டரிங் வணிகத்தில் இருக்க வேண்டும்.

(viii) அடமான உத்தரவாத நிறுவனங்கள் (MGC): வீட்டு வசதி கடன்களுக்கான நிலுவைத் தொகை மற்றும் வட்டிக்கு உத்தரவாதம் அளிக்கும் வணிகத்தைச் செய்யும் நிறுவனம். இதன் மொத்த வருமானத்தில் 90% இந்த உத்தரவாத வணிகத்திலிருந்து வர வேண்டும்.

(ix) தனித்துவ முதன்மை டீலர்கள் (SPDs): அரசுப் பிணையங்களில் (Government Securities) முதன்மை டீலர் நடவடிக்கைகளை மேற்கொள்ள அங்கீகாரம் பெற்ற NBFC-கள். இவை அரசுப் பத்திரச் சந்தையை ஆதரிக்கின்றன.

(x) செயல்பாடற்ற நிதி ஹோல்டிங் நிறுவனம் (NOFHC): ஒரு வங்கி நிறுவனம் மற்றும் அதன் குழுமத்தில் உள்ள பிற நிதிச் சேவை நிறுவனங்களின் பங்குகளை வைத்திருக்கும் ஒரு நிறுவனம்.

(xi) NBFC கணக்குத் திரட்டி (NBFC-AA): வாடிக்கையாளரின் நிதித் தகவல்களைத் திரட்டி, அவற்றை ஒருங்கமைத்து, வாடிக்கையாளர் அல்லது நிதித் தகவல் பயனாளர்களுக்கு வழங்கும் சேவையைச் செய்யும் நிறுவனம். இந்தத் தகவல்கள் நிறுவனத்தின் சொத்தாகக் கருதப்படாது.

(xii) NBFC பியர் டு பியர் கடன் தளம் (NBFC-P2P): ஆன்லைன் தளம் மூலமாக கடன் வழங்குபவர்களையும் பெறுபவர்களையும் இணைக்கும் ஒரு இடைத்தரகராகச் செயல்படும் நிறுவனம்.

92800 85940

என்.கே.சி பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்

We Listen You Prosper

(இந்திய ரிசர்வ் வங்கியின் பதிவு பெற்ற வங்கி சாரா நிதி நிறுவனம்)

NKC FINANCE PRIVATE LIMITED

நகை அடமானக் கடன்

தங்க நகைகள் தரம் பார்க்கும் வசதி

Gold, Silver Ornaments Testing Facility

Door No: 2/9B, பஜார் மெயின்ரோடு, INDANE GAS எதிரில்,
பொன்-புதுப்பட்டி - 622 407. பொன்னமராவதி.புதுக்கோட்டை மாவட்டம்.

ELEVATE YOUR WORLD.
Reliable. Efficient. Connected.
We keep you safe:
Built with care.
Fast and smart:
Always ready for you.
Good for the planet:
Saves energy, too.
Here when you need us:
Help is just a call away.
Get Free Quote:
7299012340, 9042967057, 6381361322
MUTHU GROUP
SINCE 1970
MAGNETECH
ELEVATORS PVT.LTD.

நன்றாக சம்பாதிக்கிறீர்கள், ஆனால் எதையும் சேமிக்கவில்லையா?

உங்கள் பணம் உண்மையில் எங்கே செல்கிறது என்பதை பற்றி பார்ப்போம் இங்கே!

சேதுராமன் சாத்தப்பன்
Advisor,
NKC Finance Private Limited

செலவுகள் அதிகரித்து கொண்டே சென்றால், அதிக வருமானம் தானாகவே செல்வமாக மாறிவிடாது என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

நம் இன்றைய இளைஞர்கள் பலருக்கு தற்போது தான் கைநிறைய சம்பாதிக்கிறோமே, மேலும் இருவரும் சம்பத்திக்கிறோமே தற்போது ஏன் சேமிக்க வேண்டும்... அதை பத்து இருபது வருடங்கள் கழித்து

பார்த்து கொள்ளலாம் என்ற எண்ணங்கள். பி.எப்., பணம் தான் நிறைய வருமே என்ற நினைப்புகள் வேறு. தற்போது வாழ்க்கை வாழ்வதற்கே என்ற எண்ணத்தில் செலவழிக்கிறார்கள்.

அதிக வருமானம் இருந்த போதிலும், வாழ்க்கை முறை, பணவீக்கம் சேமிப்பைத் தடுக்கிறது.

அதிக நிலையான மற்றும் கவனிக்கப்படாத சிறிய செலவுகள் சேமிக்கும் திறனைக் குறைக்கின்றன.

முறையான சேமிப்புப் பழக்கங்கள் இல்லாதது செல்வத்தை உருவாக்கும் வாய்ப்பை இழக்க வழிவகுக்கிறது.

வருமான வளர்ச்சியுடன் சேர்ந்து உங்கள் வாழ்க்கை முறையும் மாறத் தொடங்குகிறது. நீங்கள் விலையுர்ந்த ப்ளாட்டிற்கு குடியேற நினைக்கலாம், அதன் மாத ஈ.எம்.ஐ. கூடி வரும் அல்லது ஒரு விலையுயர்ந்த காரை வாங்கலாம், சப்ஸ்கிரிப்ஷன்கள் அதிகரிக்கலாம்.

செலவுகள் படிப்படியாக கூடி கொண்டு செல்லும் வரை, மக்கள் அதில் எந்தத் தவறும் இருப்பதைக் கவனிக்கத் தவறுகிறார்கள். படிப்படியாக உங்கள் வருமானம் அந்த மாற்றங்களுக்குச் செலுத்துவதற்கே முழுமையாகச் சென்றுவிடுகிறது, மேலும் சேமிப்பிற்காகக் கூடுதல் பணம் எதுவும் கிடைப்பதில்லை.

அதிக நிலையான செலவுகள், நீங்கள் எதிர்பார்ப்பதை விட உங்கள் சம்பளத்தில் ஒரு பெரிய பங்கை எடுத்துக்கொள்ளக்கூடும்.

உங்கள் வருமானத்தின் கணிசமான பகுதி, உங்களுக்காக ஏற்கனவே உள்ள நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கே செல்கிறது. இவை வாடகை, கார், வீடு ஈ.எம்.ஐ., காப்பீடு, பள்ளிப்படிப்பு, சப்ஸ்கிரிப்ஷன், தொடர்ந்து செல்லும் விடுமுறைகள் மற்றும் பயன்பாட்டுக் கட்டணங்களாக இருக்கலாம்.

இத்தகைய சூழ்நிலையில், அந்தக் கூடுதல் வருமானத்தை சேமிப்பு மற்றும் முதலீட்டிற்கான ஆதாரமாகப் பயன்படுத்தும் வாய்ப்பை நீங்கள் இழக்கிறீர்கள். மாறாக, அதிகரித்து வரும் வருமானம் என்பது இந்தச் செலவுகளுக்கு ஒரு உயரும் தொகை செலுத்தப்படுகிறது என்பதாகும், இது நீங்கள் விரும்பியபடி நிர்வகிக்க எதுவும் மிச்சமிருப்பதில்லை.

சிறிய செலவுகள் கவனிக்கப்படாமல் போகும் அளவுக்குப் புலப்படாமல் இருக்கலாம்.

பொருட்களை வாங்குவதைத் தவிர, பொதுவாக எந்தவொரு குறிப்பிட்ட கவனமும் இல்லாமல் செலுத்தப்படும் சிறிய பர்சேஸ் மற்றும் சந்தாக்கள் காரணமாகப் பணத்தின் கணிசமான பகுதி காணாமல் போகக்கூடும். செயலிகள் மூலமான உணவு ஆர்டர்கள், செயலிகள் வழியாக செய்யப்படும் பர்சேஸ், ஆன்லைன் ஷாப்பிங், டாக்சி சேவைகள் மற்றும் நீங்கள் அரிதாகப் பயன்படுத்தும் சந்தாக்கள் ஆகியவற்றை இதில் சேர்க்கலாம்.

ஒவ்வொரு கட்டணமும் தனித்தனியாகப் பார்க்கும்போது முக்கியமற்றதாகத் தோன்றுவதால், அது உங்கள் கவனத்திலிருந்து தப்பிவிடுகிறது.

அதன் விளைவாக, சேமிப்பிற்காகக் கூடுதலாகச் செய்ய உங்களிடம் எதுவும் மிச்சமில்லை, ஏனெனில் அது ஒரு தொடர் செயல்முறையாகும், உங்கள் செலவுப் பழக்கங்கள் தானாகவே வளரும்போது அது திறம்படச் செயல்பட முடியாது.

சம்பாத்தியம் சேமிப்பு மற்றும் முதலீடுகளாக மாற வேண்டும்

நல்ல சம்பளம் பெறுவது, இருவர் சம்பாதிப்பது என்றால் உங்கள் வருமானத்தின் ஒரு குறிப்பிட்ட பகுதியை முதலில் சேமிப்பு மற்றும் முதலீடுகளில் செலுத்த வேண்டும் என்பதை கவனத்தில் கொள்ளுங்கள்.

தற்போதைய ஏ.ஐ. வரவு எப்படி வேலைகளை இல்லாமல் செய்து வருகிறது என்பது நிதசர்மான உண்மை. இதை மனதில் வைத்தாவது சேமிப்பு பழக்கத்தை இப்போதிலிருந்து தொடங்குங்கள்.

SENTHOOR LOCKERS
SAFE. SECURE. YOURS.
Sri Ram Nagar, Kottaiyur
Behind MED PLUS, 29/1, Trichy Main Road, Sri Ram Nagar, Kottaiyur – 630106
SAFE. SECURE. YOURS.
YOUR BELONGINGS, OUR RESPONSIBILITY!
LOCKER DETAILS
SIZE (Inches)
14" x 20" x 22"
24" x 20" x 27"
SALIENT FEATURES
ADVANCED SECURITY
Digital Lock with Personal Access
24/7 CCTV SURVEILLANCE
Complete Safety Round the Clock
FIRE SAFE MATERIAL
High Quality Steel – Fire & Rust Resistant
AIR-CONDITIONED LOCKERS
Proper Air Circulation to Keep Belongings Fresh
CLEAN & HYGIENIC
Regular Cleaning for a Better Experience
MEMBER SUPPORT
Friendly Assistance Whenever You Need
9363002923
7010407383